# சிறுவர் அரங்கம்

குழந்தைகளின் திறனுக்கான ஒரு தளம்

இதழ் : 1

2013



சமூக மாற்றத்திற்கான கருவி




தூத்துக்குடி மாவட்டம், ஈழஈரால் குழந்தைகள் பாராளுமன்றம்

திருச்சி மாவட்டம், மணிகண்டம் குழந்தைகள் பாராளுமன்றம்





**அருட்சகோதரி. சூசை மகனிபிகாத்**
மாநிலத் தலைவி
சலேசிய சகோதரிகள்.

அன்பார்ந்த குழந்தைகளே! இந்த இதழின் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெருமிதம் அடைகிறோம்.

'அருவி' (ARUWYE) ஒரு சமூக முன்னேற்ற மையம். சலேசிய சகோதரிகள் தமிழகம் முழுவதும் செய்து வருகின்ற சமூகப் பணிகளை ஒருங்கிணைக்கின்ற மையமாக இது செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தை தலைமை பொறுப்பு ஏற்று நடத்திக்கொண்டு இருக்கின்ற சகோதரி அசாரியஸ் ஆரோக்கிய மேரி செல்வியையும், அவர்களுடன் பணியாற்றும் பணியாளர்களையும் பாராட்ட விரும்புகிறேன்.

அருவியின் நோக்கத்தை மனதில் கொண்டு உற்சாகத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற 'அருவி' அணிக்கு என்னுடைய வாழ்த்துகளும் ஜெபங்களும். இவர்களின் ஆர்வமிகுந்த பணியால் 'அருவி'யின் பணிகளிலும் சேவைகளிலும் நல்ல வளர்ச்சி இருப்பதை என்னால் கண்கூடாக காண இயலுகின்றது.

இவர்களின் இந்தப் பணியின் மூலம் சலேசிய சகோதரிகள் பணி செய்யும் பகுதிகளில் வாழும் குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் ஆகியோர் இச்சமூக முன்னேற்றத்திற்கு வழிவகை செய்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிராமத்து குழந்தைகளின் - குறிப்பாக மாலைநேர வகுப்பில் வந்து படிக்கின்ற குழந்தைகளின் சிந்தனையிலும் படைப்பாற்றலிலும் ஒரு மாற்றத்தை கொண்டு வரவும், குழந்தைகளுக்கு அவர்களுடைய திறன்களை வெளிக் கொணரவும் இந்த 'சிறுவர் அரங்கம்' ஒரு நல்ல கருவியாகவும், அடித்தளமாகவும் அமையும் என்பதை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமூகத்தில் ஓரந்தள்ளப்பட்ட மக்களுக்கு பல பணிகளைச் செய்து கொண்டிருக்கின்ற 'அருவி' அணிக்கு இறைவனும், அன்னை மரியாளும் நிறைவாக ஆசிர்வதிக்க வேண்டுகின்றேன். அவர்களின் வருங்கால பணிகள் சிறக்க பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,

*Sr. Soosai Magnificat*

## ● சகோதரியின் அறிமுகம்



**சகோதரி. அசாரியஸ் ஆரோக்கிய மேரி செல்வி**

இயக்குநர்

'அருவி' (ARUWYE)

மாலை நேரப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ மாணவியருக்கு அவர்களுடைய திறன்களை வளர்க்கும் விதத்தில் இந்த 'சிறுவர் அரங்கம்' மலரானது வெளியிடுவதைக் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பணியைச் செய்ய எனக்கு பக்கபலமாக இருந்து வருகின்ற சலேசிய சகோதரிகளின் மாநிலத் தலைவி அருட்சகோதரி சூசை மகனிபிகாத் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. மாநில ஆலோசனைக்குழுவுக்கும் நன்றி.

மாலை நேர வகுப்பும், குழந்தைகள் பாராளுமன்ற நிகழ்ச்சியும் நன்றாக செயல்பட நிதி உதவி அளித்து வரும் Don Bosco-க்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இங்கு தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகம் முழுக்க 10 மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மாலை நேர வகுப்பு பணிகளை ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் செய்து கொண்டிருக்கின்ற அனைத்து இல்லத் தலைவிகளுக்கும் மற்றும் ஒவ்வொரு இல்லங்களிலும் இந்த மாலைநேர வகுப்புப் பணியை ஒருங்கிணைத்து செய்துகொண்டிருக்கின்ற அனைத்து சகோதரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றிகள்.

மேலும், இந்தச் 'சிறுவர் அரங்கம்' இதழுக்கு கவிதை, கட்டுரை, கதை, விடுகதை, ஓவியம் போன்ற படைப்புகளை அனுப்பி வைத்த அனைத்து மாணவர்களுக்கும் என் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் செய்துகொண்டிருக்கிற இந்தப் பணியையும் இனிவரும் காலங்களில் செய்யக்கூடிய பணிகளையும் சமுதாய மாற்றத்திற்காக செய்திடவும் இறை அன்னை 'அருவி' அணியை நிறைவாக ஆசிர்வதிக்க வேண்டுகிறேன்.

அன்புடன்,

Sr. Asarias Arul Mary Selvi

# வானம் உயரப் போனது ஏன்?

❑ ரா.கௌசல்யா
ஒன்பதாம் வகுப்பு
ஜீவபூக்கள் மாலைநேரப் பள்ளி
வாலம்பட்டி

**வெ**குகாலத்திற்கு முன் வானம் இவ்வளவு உயரத்தில் இல்லை. கையை உயர நீட்டினால் அதைத் தொட்டு விடலாம். அவ்வளவு தாழ்வாக இருந்தது. சில நேரங்களில் வானம் இன்னும் கீழே இறங்கி வரும். குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடும். அவர்களுடன் சேர்ந்து ஆரவாரம் செய்யும். குறும்பு நிறைந்த அது விளையாடுவதோடு நிறுத்தாது. குழந்தைகளைக் கிள்ளிவிடும். அவர்கள் அழுவதைப் பார்த்து கலகலவென்று சிரிக்கும். கைக்கு எட்டாத உயரம சென்று விடும். தன்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது என்று நினைத்தது அது. நாளாக நாளாக அதன் குறும்பு அதிகமாகிக்கொண்டே வந்தது. இன்று யாரிடம் குறும்பு செய்யலாம் என்று கீழே பார்த்தது அது. ஒரு பாட்டி தலையில் தயிர்ப் பானையுடன் வந்து கொண்டிருந்தாள். இந்த பாட்டியிடம் குறும்பு செய்து விளையாடி மகிழலாம் என்று நினைத்தது. கலகலவென்று சிரித்தபடியே கீழே இறங்கியது. பாட்டி தலையில் இருந்த தயிர்ப் பானையைத் தட்டிவிட்டது. அந்த பானை கீழே விழுந்து நொருங்கியது. அதில் இருந்த தயிர் முழுவதும் தரையில் வழிந்தோடியது. எதிர்பாராது நடந்ததைக் கண்ட பாட்டி கோபம் கொண்டாள். கேலி செய்து சிரித்தபடி இருந்த வானத்தை பார்த்தாள் அவள். அதை எப்படித் தண்டிப்பது என்று நாலாபக்கமும் பார்த்தாள். கீழே கிடந்த தடி ஒன்று அவள் கண்ணில் பட்டது. அதை எடுத்த அவள் “இனி இப்படி மற்றவர்களிடம் குறும்பு செய்வாயா?” என்று கத்தியபடி வானத்தை அடித்தாள். ஆனால் வானமோ தடி எட்டாத உயரத்திற்குச் சென்றது. பாட்டி மீண்டும் அடிக்க முயன்றாள். ஒரு அடியும் அதன் மேல் படவில்லை. “கிழவி இப்போது என்ன செய்வாய்?” என்று கேலி செய்து சிரித்தது வானம். என்ன செய்வது, அதை எப்படி தண்டிப்பது என்பதை அறியாமல் திகைத்தாள் பாட்டி. அவளால் கோபத்தை அடக்க முடியவில்லை. “எனக்கு எட்டாத உயரத்திலா இருக்கிறாய்? என்னிடமா குறும்பு செய்து விளையாடுகிறாய்? இனி நீ யாருக்கும் எட்டாத உயரம் போகப் போகிறாய். உன்னால் கீழே வரவே முடியாது” என்றாள் கோபமாக. பிறகு “வானமே எட்டு வண்டி நூல் போட்டாலும் எட்டாத உயரம் போ. பத்து வண்டி நூல் போட்டாலும் பத்தாத உயரம் போ” என்று சாபம் தந்தாள். உடனே வானம் கிடுகிடுவென மேலே சென்றது. யாருக்கும் எட்டாத உயரத்திற்கு வானம் சென்றுவிட்டது.

# பொங்கல் திருநாள்!

❑ ஆர். முனியராஜ்
ஏழாம் வகுப்பு
தாமரை மாலைநேரப் பள்ளி
ஈராட்சி



தமிழர் தம் வாழ்நாளில் எத்தனையோ விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அவற்றுள் பொங்கல் திருநாள்தான் தலைமையானதாகும்.

### பழையன கழிதலும்

மார்கழித் திங்கள் இறுதி நாளைப் போகிப் பண்டிகை எனக் கொண்டாடுவர். போகிக்கு முன்னரே வீடுகளைத் தூய்மை செய்வர். வெள்ளை அடிப்பர். தேவையற்ற பொருள்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் போகியன்று விடியற்காலையில் தீயிட்டுக் கொளுத்துவர். சிறுவர்கள் போகித் தீயைச் சுற்றி வந்து சிறுமேளம் கொட்டி மகிழ்வர்.

### பெரும் பொங்கல்

பெரும் பொங்கலன்று, புதுப்பானையில் பொங்கல் வைப்பர். பொங்கல் பானை பொங்கும்போது "பொங்கலோ பொங்கல்" என மகிழ்ச்சியுடன் கூறுவார்கள். பின்னர் பொங்கலை சூரியனுக்குப் படைப்பர்.

### மாட்டுப் பொங்கல்

பெரும் பொங்கலுக்கு மறுநாள், உழவர்கள் தங்களுக்குப் பயன்பட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விழா நடைபெறும். அது மாட்டுப்பொங்கல் எனப்படும். அந்த நாளில் மாடுகளைக் குளிப்பாட்டிப் பொட்டிட்டுக் கொம்புகளுக்கு வண்ணம் பூசி, மாலை அணிவித்து அலங்கரிப்பர். அன்று பொங்கலிட்டு, மாடுகளுக்கு உண்ணக் கொடுத்து வழிபட்டு மகிழ்வர். அன்று மாலை மாடுவிடுதல் என்னும் நிகழ்ச்சி கிராமங்களில் நடைபெறும். அது 'மஞ்சுவிரட்டு' என்றும் வழங்கப்படும்.

### காணும் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் காணும் பொங்கல் நடைபெறும். அதனைக் 'கன்னிப் பொங்கல்' என்றும் வழங்குவர். காணும் பொங்கல் நாளில் பெரியோரைக் கண்டு இளையோர்கள் ஆசிபெறுவர். வாழ்த்துக்கூறி அன்பு காட்டும் நன்னாளாகவும் அந்நாள் கொண்டாடப்படும். இளம் பெண்கள் பெரியோரை வழிபட்டு வருவர்.

சுருங்கக்கூறின், தமிழரின் தலைசிறந்த பண்புகளாகிய அகத்தூய்மை, புறத் தூய்மை, நன்றி போற்றல், வீர உணர்ச்சி ஆகியவற்றை நினைவுகூர்ந்து, உழைப்பின் பயனை உணர்ந்து போற்றும் நாளே 'பொங்கல் திருநாள்' எனப்படும்.



# படிக்கும் வயதில்!

❑ ஞா.காவியா
எட்டாம் வகுப்பு

ஒரு நாள் நான் உணவகத்திற்குச் சென்றேன். அப்போது ஒரு சிறிய பையன், நான் சாப்பிட்ட பிறகு மேசை துடைக்க வந்தான். அவனைப் பார்க்கவே பரிதாப மாக இருந்தது. அவனைப் பார்த்து "நீ பள்ளிக்குச் செல்லவில்லையா? என்று கேட்டேன். அதற்கு அவன், "என் வீட்டில் சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டம். நான் இங்கு வேலை செய்வதனால் இங்கேயே சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்றான். நான், "பள்ளியில் விலையில்லா சீருடை, காலணி, புத்தகம், நோட்டு, கணித உபகரணப் பெட்டி, பை, மதிய உணவு அனைத்தும் உனக்கு பணமில்லாமல் கிடைக்கிறது. அங்கு சென்று உன் படிப்பைத் தொடரவேண்டும். பதினான்கு வயது வரை அனைத்து குழந்தைகளும் கட்டாயம் படிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது" என்று அவனுக்கு விளக்கிக் கூறினேன். அதற்கு அவன், "நான் என் அம்மாவின் அனுமதி பெற்று பள்ளிக்கு கண்டிப்பாக செல்வேன்" என்று உறுதியளித்தான்.

கல்வி மாணவர்களுக்கு வார்த்தை களை மட்டும் வாசிக்க கற்றுத் தருவதாக அமையக்கூடாது. மாறாக, இந்த உலகை வாசிக்கக் கற்றுத்தர வேண்டும்.

மனித உரிமைக் கல்வி மூலம் இதை நான் வகுப்பில் கற்றுக்கொண்டேன். அதனால்தான் என்னால் உரிமையுடன் கூற முடிந்தது.

குழந்தைகளுக்கு கற்றல் என்பது குடும்பத்தில், குடும்ப சூழ்நிலையில் ஆரம்பித்தாலும், முறையான கல்விதான் அந்தக் குழந்தையின் ஆளுமைத்திறனை வளர்க்கத் தூண்டுகோலாக அமைகிறது.

# தாயின் அன்பு!



ஆயிரம் நல்உள்ளம் சேர்ந்து
உருவான உன் உள்ளமே, என் அம்மா!

அந்த உள்ளத்தில் நீங்காத
ஒரு இடத்தை எனக்குக் கொடு!
பசையைப் போல என்னை
ஒட்டம்மா உன் உள்ளத்தில்!

கடலில் கலக்கும் நதியைப் போல
உன் உள்ளத்தில் என்னைக் கலப்பாயே!

மலரில் உள்ள தேன்
தேனியைக் கவர்வதுபோல
உன் அளவிலா அன்பைக் காட்டி
என்னைக் கவர்வாயே!

நான் கலையற்ற சிலையாய்
இருந்தபோது வர்ணமாய் இருந்து
கலை சேர்த்தாயே!

உன் அன்பு எனக்குத்
தேனைவிட சுவையானது!
உன் அரவணைப்பே
என் உள்ளத்தின் அமைப்பு!

நான் இலையில்லா
மரமாக இருந்தபோது
வேராக ஊன்றி நின்று
இலை தந்து, கனி தந்து,
என்னை சுவைப் பலாவாக்கினீரே,
உன் அன்பே நான் என்றும்
இழக்க தயாராகிலேன்!





# பெருந்தலைவர் காமராசர்

நா.ஹேமலதா
ஒன்பதாம் வகுப்பு
மாலைநேரப் பள்ளி
அப்பணம்பட்டி

தன்னலமற்ற தலைவர், கர்மவீரர், கல்விக் கண் திறந்த முதல்வர், ஏழைப் பங்காளர் என்னும் புகழுரைகளுக்கெல்லாம் உரியவர் நமது காமராசர். இவர், விருதுநகரில் குமாரசாமி - சிவகாமி தம்பதிகளுக்கு மகனாய் 1903ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15ஆம் நாள் பிறந்தார்.

### இளமைப் பருவம்

காமராசரின் தாத்தா நாட்டாண்மை. அவர் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்குச் செல்லும்போது சில சமயம் தன் பெயரன் காமராசரையும் உடன் அழைத்துச் செல்வார். அங்கு காமராசர் ஓர் ஓரமாக உட்கார்ந்தபடி தாத்தா கூறும் தீர்ப்புகளைக் கூர்மையாக கவனிப்பார். காமராசரின் இந்தப் பண்பைக் கண்ட பலரும் அவரை பாராட்டினர்.

காமராசர் திண்ணைப் பள்ளியில் தமிழ் கற்றார். அதன் பிறகு ஓர் ஆண்டு எழுத்துக்களையும் கற்றார். அதன் பின்பு, கல்வியோடு உணவும் அளிக்கப்பட்ட உயர் நிலைப் பள்ளி ஒன்றுக்குச் சென்று கல்வி பயின்றார்.

காமராசருக்கு ஏழு வயது இருக்கும் போது 'வந்தே மாதரம்' என்று ஒரு சுவரொட்டியில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டார். அந்தச் சொல், அவரது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. அவரது உள்ளத்தில் மெல்ல மெல்ல விடுதலைப் போராட்ட உணர்வும் சுடர்விட்டுக் கொண்டிருந்தது. அவருக்குப் பன்னிரண்டு வயதிலேயே பள்ளிக்குச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டது.

## அரசியலில் ஈடுபாடு

காமராசர் தேசியஇயக்கமான காங்கிரசில் சேர்ந்து, அதன் தொண்டராகத் தம் அரசியல் வாழ்வினைத் தொடங்கினார். கட்சிக் கூட்டங்கள் நடத்தினார்; ஊர்வலங் களில் கலந்து கொண்டார்; கொடி பிடித் தார்; சைமன் குழு எதிர்ப்பு, உப்பு சத்தியா கிரகம், வெள்ளையனே வெளியேறு முதலிய போராட்டங்களில் கலந்துகொண் டார்; சிறை சென்றார். பல ஆண்டுகள் சிறையில் கழித்தார். தனது தன்னலமற்ற உழைப்பினால் அவர் காங்கிரஸ் கட்சியின் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1937ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பி னராக காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## தலைவர்களை உருவாக்குபவர்

காமராசர் காங்கிரஸ் கட்சியில் பல தலைவர்களை உருவாக்கியுள்ளார். பிரகாசம், ஓமந்தூர் இராமசாமி, குமாரசாமி ஆகியோர் முதலமைச்சராகப் பதிவியேற்பதற்குக் காமராசர் காரணமாக இருந்துள்ளார். நேருவின் மறைவிற்குப் பின் இந்திரா காந்தியை பிரதமராக ஆக்கியதும் இவரே. இதனால் காமராசரை 'தலைவர் களை உருவாக்குபவர்' என அழைத்தனர்.

## முதலமைச்சர் காமராசர்

1954ல் காமராசர் முதலமைச்சர் ஆனார். அவரது அமைச்சரவை சிறியதாக இருந்தபோதிலும் செயல்திறன் மிக்கதாக விளங்கியது. அதனால், மக்கள் நலன் பயக்கும் நல்ல பல திட்டங்களை அவரால் செயல்படுத்த முடிந்தது.

## தொழில் முன்னேற்றம்

காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. அப்போது தமிழகத்தில் பொருளியல், தொழில்துறைத் திட்டங்கள் பல தொடங்கப்பட்டன; மின்திட்டங்கள் மிகுந்தன; சாலைகள் போடப்பட்டன; தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன. வேளாண்மைக்கான பாசன வசதிகள் செய்யப்பட்டன. அணைகள் கட்டப் பட்டன.

## கல்விப்புரட்சி

தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர்தோறும் உயர்நிலைப்பள்ளி என்பதே காமராசரின் நோக்கமாக அமைந்தது. தொடக்கப்பள்ளிகளில் மதிய உணவு தொடங்கினார். பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டு பள்ளிகளுக்கான அடிப் படைப் பொருட்களும் கருவிகளும் பெறப்பட்டன.

## காமராசர் திட்டம்

1962 சீன படையெடுப்புக்குப்பின், காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. எனவே, "கட்சியை வலுப் படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் பாடுபடவேண்டும்'' என காமராசர் வலியுறுத்தினார். முதலில் தாமே முதலமைச்சர் பதவியை விட்டு விலகிக் கட்சிப் பணிகளுக்குத் திரும்பினார். அவரைத் தொடர்ந்து மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி முதலியோரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட்டனர். அத்திட்டத்தைக் 'காமராசர் திட்டம்' என அழைத்தனர்.


## காமராசருக்குச் செய்த சிறப்புகள்

காமராசருக்கு மத்தியஅரசு 'பாரத ரத்னா' விருது வழங்கி சிறப்பித்தது. காமராசரின் கல்விப் பணியை சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு காமராசர் பெயரைச் சூட்டியது. கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டப் பட்டது. சென்னை மெரினா கடற்கரை யில் சிலை அமைக்கப்பட்டது. சென் னையில் காமராசர் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக்கப்பட்டது. விருது நகரில் காமராசர் வாழ்ந்த இல்லம் அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லமாக்கப்பட்டது. தமிழக அரசு காமராசர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தது. இவரைக் 'கல்விக்கண் திறந்தவர்' எனத் தமிலுலகம் போற்றுகிறது.

மறைவு:

காந்தியடிகள் மீது அளவற்ற அன்பு கொண்ட காமராசர், 1975ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்தநாளான அக்டோபர் 2ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். காமராசர் மறைந்தாலும், இன்றைய தலைவர்களுக்கு முன்னோடியாக நின்று 'பெருந்தலைவர்' என்னும் பொருத்தமான புகழுரையால் நிலைத்து வாழ்கிறார்.

# ஆமை வீட்டைச் சுமப்பது ஏன்?



எம். மணிகண்டன்
பத்தாம் வகுப்பு
ஜீவபூக்கள் மாலைநேரப் பள்ளி
வாலம்பட்டி

**வெ**கு காலத்திற்கு முன் ஆமை மற்ற விலங்குகளைப் போல நான்கு கால்களால் நடந்தது. இப்படி வீட்டைச் சுமந்து செல்ல வில்லை.

விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் குறை இருந்தால் அவற்றைப் போக்கலாம் என்று நினைத்தார் கடவுள். அதற்காக தன்னைச் சந்திக்க வருமாறு விலங்கு களையும் பறவைகளையும் அழைத்தார்.

விடிகாலையிலிருந்தே கடவுளைச் சந்திக்க அனைத்தும் அவைகள் வந்து கொண்டிருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக அழைத்தார் கடவுள்.

முதலாவதாகச் சிங்கம் வந்தது. "கடவுளே! என்னை மிகுந்த வலிமையுடன் படைத்து உள்ளீர். என்னைக் காட்டிற்கு அரசன் ஆக்கினால் நன்றாக இருக்கும்" என்று பணிவுடன் சொன்னது. "இன்று முதல் நீதான் காட்டிற்கு அரசன்" என்றார் கடவுள். அவரை வணங்கிவிட்டு அது மகிழ்ச்சியுடன் சென்றது.

அடுத்ததாக, ஒட்டகம் வந்தது. "கடவுளே! நான் உண்ணும் இலை, தழைகள் மரத்தில் உயரமான இடத்தில் உள்ளன. எனக்கு நீண்ட கழுத்தைத் தந்தால் நன்றாக இருக்கும்" என்றது. "உனக்கு நீண்ட கழுத்தைத் தந்தேன்" என்றார் கடவுள். இப்படி ஒவ்வொரு விலங்கும் கேட்டதைத் தந்தார். அவர் அடுத்ததாகப் பறவைகள் வந்தன. கழுகுக்கு வலிமையைத் தந்தார். குயிலுக்கு இனிய குரலைத் தந்தார். கிளிக்குப் பேசும் ஆற்றைத் தந்தார். காலையில் இருந்து மாலை வரை இப்படியே எல்லாவற்றிற்கும் கேட்டதை தந்தார். அவையும் மகிழ்ச்சி யுடன் சென்றன. இருட்டத் தொடங்கியது. அப்பொழுது ஆமை ஒன்று அங்கே மெல்ல வந்தது. இவ்வளவு தாமதமாக வந்திருக்கிறதே என்று எரிச்சல் அடைந்தார் கடவுள். "ஏன் இவ்வளவு தாமதம்?" என்று கேட்டார். "வீட்டில் மகிழ்ச்சியாகத் தூங்கி விட்டேன். எழுந்திருக்க சோம்பலாக இருந்தது. மாலையில் தான் எழுந்தேன். உடனே இங்கு வந்தேன்" என்றது அது.

தாமதமாக வந்ததும் அல்லாமல் பொறுப்பு இல்லாமல் பேசுகிறதே என்று கோபம் கொண்டார் அவர். "வீட்டில் இருப்பதே உனக்கு மகிழ்ச்சியா? அப்படியானால் இனி நீ எப்பொழுதும் வீட்டிலேயே இரு. எங்கே சென்றாலும் வீட்டைச் சுமந்து செல் என்றார்" அவர். அன்றிலிருந்து ஆமை தன் வீட்டைச் சுமந்து செல்கிறது.




# நான் டாக்டரானால்!

எழுத்து::
❑ **வி.வேண்டா**
ஐந்தாம் வகுப்பு
மாலைநேரப் பள்ளி
நரியம்பாடி

ஓவியம்::
❑ **டி.ஆகாஷ்**
எட்டாம் வகுப்பு
கே.புதூர்

என் பெயர் வேண்டா. எனக்கு டாக்டர் ஆகவேண்டும் என்ற ஆசை உள்ளது. எனவே அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். நான் என் ஆசைப்படி மருத்துவர் ஆகிவிட்டால் ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வகையில் மருத்துவமனை ஒன்றை அமைத்து அதில் நான் சேவை புரிவேன். மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளிடம் கடுமையாக பேசமாட்டேன். என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன். ஊருக்கு ஒரு மருத்துவமனை என்ற அளவில் நான் பல ஊர்களுக்கு மருத்துவமனை அமைத்துத் தருவேன். இதுபோன்று மருத்துவத்துறையில் என் பணி தொடர்ந்துகொண்டே இருக்கும்.

# நான் ஆசிரியரானளால்!

எழுத்து:
❑ **அம்.ஆனந்தி**
மூணாம் வகுப்பு
மாலைநேரப் பள்ளி
நரியம்பாடி

ஓவியம்:
❑ **ஜெ.ஜாலி**
ஐந்தாம் வகுப்பு
பூளப்பாளையம், ஈரோடு




என் பெயர் ஆனந்தி. எனக்கு ஆசிரியர் ஆகவேண்டும் என்று ஆசை. அதற்கான முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன்.

நான் என் ஆசைப்படி ஆசிரியர் ஆகிவிட்டால் நான் பிள்ளைகளுக்கு பாடங்களை நன்றாக கற்றுத்தருவேன்.

நான் பிள்ளைகள் மனம் புண்படும்படி கடும்சொற்களை பேசமாட்டேன்.

நான் பிள்ளைகளை அடிக்கமாட்டேன்.

மற்ற ஆசிரியர்களையும் பெரியோர்களையும் அன்புடன் மதிப்பேன்.

மேலும், என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன்.



எம். மணிகண்டன்
பத்தாம் வகுப்பு
ஜீவபூக்கள்
மாலைநேரப் பள்ளி
வாலம்பட்டி

1
ஆயிரம் பேர் வந்து
சென்றாலும்
வந்த சுவடு தெரியாது.
அது என்ன?

2
கறுப்புச் சட்டைக்காரன்.
சட்டையைக் கழற்றினால்
வெள்ளைக்காரன்.
அவன் யார்?

3
ஆடி ஓய்ந்த பின்
அம்மணி வருவாள்.
அவள் யார்?

4
தட்டினால் பறப்பான்,
தடவினால் சாவான்.
அவன் யார்?

5
தாய் குப்பையிலே,
மகள் சந்தையிலே.
அவர்கள் யார்?

6
குரல் இல்லாதவன்
கூப்பிடுகிறான்.
அவன் யார்?

7.
ஊர் முழுக்க ஒரே பந்தல்
அது என்ன?

8
பார்க்க அழகானவன்,
பாம்புக்கு எதிரி.
அவன் யார்?

9
உறிச்சிட்ட குருவி
ஊர் ஊராய்ப் போகுது.
அது என்ன?

10
நனைந்தாலும் நடுங்க
மாட்டான். அவன் யார்?

11
ஆடி அசைந்து வருவான்.
தரையை அதிரப்
பண்ணுவான். அவன் யார்?

12
வண்ண வண்ண பூ,
பறந்து திரியும் பூ,
தலையில் சூடாத பூ.
அது என்ன?

13
தலையை வெட்ட வெட்ட
கறுப்பு நாக்கை நீட்டுது.
அது என்ன?

14
கிழித்த கோட்டுக்குள்
ஓடுகிறான். அவன் யார்?

15
காலையில் வந்த
விருந்தாளி,
மாலையானதும்
மறைந்துவிட்டான்.
அவர் யார்?



# திருவிழாவில் தொலைந்தவன்!

❑ க.செல்வமாலதி
ஆறாம் வகுப்பு,
ஜீவபூக்கள் மாலைநேரப் பள்ளி
வாலம்பட்டி.

மகன், தந்தை இருவரும் திருவிழாவுக்குச் சென்றனர். திருவிழாவில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. கூட்ட நெரிசலில் மகனும் தந்தையும் பிரிந்துவிட்டனர். மகனைக் காணாத தந்தை பதறினார். மகனை தேடி அலைந்தார். பலூன் கடை, மிட்டாய் கடை போன்ற இடங்களில் தேடினார். கடைசியாக காவல் நிலையத்தில் புகார் செய்தார். மீண்டும் அந்த திருவிழாக் கூட்டத்தில் பதற்றத்துடன் சுற்றிக் கொண்டிருந்தார். மகனோ சந்தோசமாக ராட்டினம் சுற்றிக் கொண்டிருந்தான். மகனை தந்தை பார்த்துவிட்டார். இருவரும் மகிழ்ச்சியாக வீடு திரும்பினர்.

# கஞ்சன்!

❑ எம்.ஞானசௌந்தர்யா
அண்ணா நகர்
டான் போஸ்கோ



ஒரு ஊரில் ஒரு கஞ்சன் இருந்தான். அவனுக்கு ஒரு மகன். அப்பா பத்து அடி பாய்ந்தால், மகன் பதினாறு அடி பாய்வான். மகன், ஒரு நாள் இரவு, ஒரு வேலையாக வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. வீட்டை விட்டு பாதி தொலைவு சென்ற பிறகுதான் வீட்டில் லைட்டை நிறுத்திவிட்டு வந்தோமா என்று சந்தேகம் வந்தது. அங்கிருந்து மறுபடியும் வீட்டுக்கு திரும்பி வந்து பார்த்தான். லைட் நிறுத்தியிருந்தது. அப்போது அவன் அப்பா அங்கு வந்தார். அவர், "நான்தான் லைட்டை நிறுத்திவிட்டேனே. இதற்காகவா நீ செருப்பு தேய தேய நடந்து வந்தாய்? மீண்டும் ஒரு செருப்பை வாங்கி காசை வீணடிக்கப் போகிறாயா?'' என்று கேட்டார். அதற்கு மகன், "அய்யோ அப்பா, அதற்காகத்தான் நான் செருப்பை கையிலேயே எடுத்துக் கொண்டு வீடுவரைக்கும் நடந்தே வந்தேன்'' என்றான்.

# சிறந்த மனிதராவேன்!



நான் எதிர்காலத்தில் சிறந்த மனிதன் ஆவேன். சமூக மனப்பான்மை உடையவராகவும், நம் நாட்டின் நலனில் அக்கறை கொண்டவராகவும் இருப்பேன். பிறருக்கு உதவி செய்யும் அன்பான எண்ணமும் குணங்களும் கொண்டிருப்பேன். எனது குறிக்கோள் டாக்டர். அந்தத் தொழிலில் நான் சேவை செய்வேன். அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் இலவச மருத்துவ வசதி கிடைக்க ஏற்பாடு செய்வேன். அறுவை சிகிச்சைகள் அனைத்தும் கவனமாக எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் முன்னெச்சரிக்கையாக இருப்பேன். தொழிலில் எந்த ஊழலும் ஏற்படாதவாறு நல்ல எண்ணத்துடன் செயல்படுவேன். எனது பெற்றோர்களை பக்குவமாய் கஷ்டப்படாமல் பாதுகாப்பேன். உலக அளவில் பெரிய சாதனை படைக்கும் மனிதனாக செயல் படுவேன்.

❑ **க.சங்கர்கனேஷ்**, நாலாம் வகுப்பு,
ஜீவபூக்கள் மாலைநேரப் பள்ளி, தெள்ளியள் வயல்.

# நட்பு



நட்பு என்பது கனவில் தோன்றி
மறைவது அல்ல
மனதில் தோன்றி
மரணம் வரை நீடிப்பது.

மெல்லிய நட்பு மெழுகுவர்த்திதான் – அதில்
நெருப்பாய் இருப்பது நீ மட்டும்தான்!


தோழியே, என்னை நினைக்க மறந்தாலும்
மறக்க நினைக்காதே!

கடலில் நம் நட்பை எழுதினேன். அதை
அலைகள் அடித்துச் செல்லவில்லை.
படித்துச் சென்றன!

தினம் தினம் பார்கக நினைக்க நினைப்பதைவிட
பார்க்காமலேயே தினம் தினம்
நினைப்பதுதான் உண்மையான நட்பு.

❑ **ஆர்.லிவி**, ஒன்பதாம் வகுப்பு,

# வீரமும் விவேகமும்!



பல்லாண்டுகளுக்கு முன்பு மகா அலெக்சாந்தர் இந்தியா மீது படை எடுத்தார். ஒரு கட்டத்தில் அவரைப் போரஸ் என்ற மன்னர் தமது பெரும் படையுடன் எதிர்த்தார். ஆறடி உயரம் உள்ள போரஸ் ஒரு மிகப்பெரிய யானை மீது சவாரி செய்தவாறு போர் புரிந்தார். அந்த யானையும் தனது மன்னரை உறுதியுடன் பாதுகாத்து வந்தது. அது தனது பலம் குன்றாதவரை, எதிரிகளின் தாக்குதல்களைப் பல தடவை முறியடித்தது. போராஸ் அரசர் போரிலே பலமாகக் காயமடைந்தார். அவர் மூர்ச்சையாகிக் கீழே விழும் தருணம் இந்த அபாயத்தை அவருடைய யானை உணர்ந்தது. உடனே அது மெதுவாகக் கீழே படுத்து தனது மன்னரின் உடலில் பாய்ந்திருந்த அம்புகளைப் பக்குவமாகத் துதிக்கையால் பிடுங்கியது. அது கடைசி மூச்சுவரை தனது மன்னரை உறுதியுடன் பாதுகாத்தது. அதன் வீரமும் விவேகமும் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்கன.

❑ மா.முருகப்பெருமாள்
ஒன்பதாம் வகுப்பு

# விடு கதைகள்!

❑ வே.மகேஸ்வரி
ஒன்பதாம் வகுப்பு
ஜீவபூக்கள் மாலை நேரப்பள்ளி
வாலம்பட்டி.

1
கட்டி போலிருந்தவனை வெட்டிப் பிழிந்தால் ருசியோ ருசி. அது என்ன?

2
எட்டுவது போல் தெரியும். ஆனால் எட்டாது. அது என்ன?

3
சடக்கென்று வருவான். சத்தமிட்டுப் போவான். அவன் யார்?

4
படுத்து தூங்காத விலங்கு. பந்தயத்தில் ஓடும் விலங்கு. அது என்ன?

5
தாழ்ப்பாள் இல்லாத கதவு, தானாக மூடித் திறக்கும் கதவு. அது என்ன?

6
குழந்தைக்கு எந்த கை பலமான கை?

7
ஓராண்டு உழுதவனுக்கு ஒரு வாரம் அறுவடை அது என்ன?

8
பாடி அழைப்பான் உறவை. கூடி உண்பான் உணவை. அவன் யார்?

9
வெளிச்சத்தை சுமந்தபடி வீதியுலா வருவான். அவன் யார்?

10
ஒரு குட்டையைச் சுற்றி ஐந்து மரங்கள். அவை என்ன?

**விடைகள்:** 1. கரும்பு, 2. வானம், 3. தும்மல், 4. குதிரை, 5. கண் இமை, 6. அழுகை, 7. தேர்வு, 8. காகம், 9. மின்மினி, 10. உள்ளங்கை, விரல்கள்

## சமத்துவ உரிமை

**நா**ன் என் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே தினமும் ஒரு வேலைக்காரர் வருவார். அவர் அவரது வேலையை சரியாக செய்து முடித்தாலும் எங்க சித்தி அவரை கீழ்த்தரமாக நடத்துவார். இதைக் கண்ட நான் என் சித்தியிடம், "அவர் உங்களுக்கு ஒரு வேலைக்காரராக இருந்தாலும் அவர் ஒன்றும் உங்கள் அடிமை இல்லையே. அவரும் நம்மைப் போல ஒரு மனிதர்தானே. அவரும் நம்மைப் போல வாழ்வதற்காகத்தானே பிறந்துள்ளார். ஏன் இப்படி கீழ்த்தரமாக நடத்துகிறீர்கள்?" என்று கேட்டேன். நான் கற்ற மனித உரிமைக் கல்வி என் வாழ்வில் பயனுள்ளதாக உள்ளது.

- **எ. ஆயிஷா**, ஒன்பதாம் வகுப்பு.

## உயிர்களிடத்தில் அன்பு

**ஒ**ரு வீட்டில் ஒருவர் ஆடு வளர்த்து வந்தார். அதனை நான் அடிக்கடி தூக்கி கொஞ்சி மகிழ்வேன். தீபாவளி அன்று அந்த ஆடு எங்கள் வீட்டின் அருகில் நின்றது. அதற்கு நான் கொஞ்சம் புல்லைப் போட்டேன். அதை சாப்பிட்டு விட்டு தெரு முனைக்குச் சென்றது. அங்கு ஒரு சிறுவன் ஓடிவந்து அந்த ஆட்டின் கழுத்தில் சரவெடியைச் சுற்றினான். அவன் அதன் திரியில் தீயை வைப்பதற்குள் நான் அங்கு ஓடிச் சென்று தடுத்தேன். "ஐந்தறிவு ஆடு உனக்கு என்ன தீங்கு செய்தது. அதுவும் உன்னைப் போல ஒரு உயிர்தானே. உன் கழுத்தில் சரவெடியைச் சுற்றி வெடிக்க வைத்தால் எப்படி இருக்கும். அதுபோலத்தானே அதற்கும் வலிக்கும்? இப்படி நீ செய்வது, பிற உயிர்களைத் துன்புறுத்தும் செயலாகும். இதற்கு தண்டனை உண்டு" என்று கண்டித்தேன். அவன் தன் தவறை

## பெண்ணுரிமை

**தெ**ருவில், என் வீட்டிற்கு அருகில், ஒருவர் குடித்து விட்டு அவரது மனைவியை அடித்துக் கொண்டிருந்தார். அந்தப் பெண் வலி தாங்க முடியாமல் அலறினாள். ஆனால், ஊர்மக்கள் அதை ஒரு வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். யாரும் அவரைத் தடுக்கவோ, அவரைக் கண்டிக்கவோ இல்லை. சிறுமியாகிய நான் மட்டும் அவரைத் தடுத்தேன். "உங்கள் மனைவியாக இருந்தாலும், ஒரு பெண்ணை இப்படி அடிப்பது பெண் உரிமை மீறல்" என்று அவரிடம் பேசினேன். அவர் அடிப்பதை விட்டுவிட்டார். எங்கள் ஊரில் கணவனால் மனைவி அடிபடுவதை எல்லாரும் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது, நான் மட்டும் துணிச்சலாக எதிர்த்துக் கேட்டதற்குக் காரணம் எனக்கு அளிக்கப்பட்டிருந்த மனித உரிமை மீறல் கல்விதான்.

- **ஜி.சியாமளா**, ஒன்பதாம் வகுப்பு.

உணர்ந்தான். அன்று முதல் அந்த ஆட்டினை அவன் அன்போடு கவனித்துக் கொள்கிறான்.
- **ஜி.ராதிகா**, ஒன்பதாம் வகுப்பு.

## பிறர் உரிமையில் தலையிடுதல்

**இ**ரவில் தூங்கிக்கொண்டிருந்தோம். திடீரென ஏதோ பெரும் சப்தம். நான், அப்பா அம்மா அனைவரும் தூக்கத்திலிருந்து பதறியடித்துக் கொண்டு எழுந்துவிட்டோம். அப்போது நாங்கள் வெளியில் போய் பார்த்தபோது, பக்கத்து வீட்டிலிருந்து ஒருவர் மிகுந்த சத்தம் வைத்துக் கொண்டு மியூசிக் கேட்டுக்கொண்டிருந்தார். நான் அவரிடம் "அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள் தூங்க வேண்டாமா? ஏன் இவ்வளவு சப்தம் வைத்து மியூசிக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டேன். "எங்கள் வீட்டில் நான் மியூசிக் கேட்க உரிமையில்லையா?" என்று அவர் கேட்டார். "உங்கள் வீட்டில் மியூசிக் கேட்க உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அடுத்த உரிமையைப் பறிக்க உங்களுக்கு உரிமை இல்லை" என்று கூறினேன். எனது பெற்றோர் என்னை பாராட்டினர். நிம்மதியாக தூங்கினோம்.
- **தி.பிரிஸ்சில்லா**, ஒன்பதாம் வகுப்பு.

## மத நம்பிக்கை

**எ**ங்க ஊரில் ஒருவர் கிறிஸ்தவ மதத்தின் மீது ஏற்பட்ட ஈடுபாட்டின் காரணமாக கிறிஸ்தவராக மாறிவிட்டார். ஆனால், ஊரில் உள்ள மற்றவர்கள் அவரை விமர்சனம் செய்தார்கள். அவர் மனதை பல்வேறு விதத்தில் காயப்படுத்தினார்கள். ஒருவர் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்ற அவருக்கு உரிமை உண்டு. அவரது அந்த உரிமையை காயப்படுத்துவது மனித உரிமை மீறல் ஆகும். நான் அவரைச் சந்தித்து ஆறுதலாகப் பேசுவேன்.
- **வா.ஹரிதா**, ஒன்பதாம் வகுப்பு.

## முதியோரை இகழேல்!

**எ**ங்க வீட்டுக்கு பக்கத்து வீட்டில் இருக்கும் ஒரு அம்மா ஆடு, மாடு, கோழி என நிறைய வீட்டு விலங்குகளை வளர்க்கிறார்கள். அதன் கழிவுகளை சுத்தப்படுத்தி, அவர் வீட்டுக்கு எதிராக இருக்கும் ஒரு வயதான பாட்டியின் வீட்டிற்கு முன் தினமும் கொட்டி வந்தார். இதை அந்தப் பாட்டி முதுமையின் காரணமாகவும், ஏழ்மையில் காரணமாகவும் ரொம்பவும் சகித்து வந்தாள். பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கிறதல்லவா. ஒரு நாள் பாட்டிக்கு பொறுமை எல்லை கடந்து விட்டது. அந்த அம்மாவிடம் "இப்படி என் வீட்டுக்கு முன் கொண்டு வந்து கழிவுகளை கொட்டுகிறாயே, நான் இங்கு வாழ்வதா, வேண்டாமா?" என்று கேட்டுவிட்டாள். உடனே அந்த அம்மாவுக்கு கோபம் வந்துவிட்டது. தேவையில்லாத வார்த்தைகளால் அந்த பாட்டியை அந்த அம்மா திட்டிக்கொண்டிருந்தாள். ஊர் கூடி வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிட்டது. என்னால் பொறுத்துக் கொண்டு இருக்கமுடியவில்லை. அந்த அம்மாவிடம் சென்று, "உங்கள் வீட்டு கழிவுகளை அடுத்தவர் வீட்டு முன் கொட்டுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. யாருக்கும் பிரச்சினை இல்லாத இடத்தில் கொண்டு போய் கொட்டுங்கள். அந்த பாட்டி கேட்டதுதான் சரி" என்று சொன்னேன். அங்கே கூடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் "ஒரு சின்னப் பொண்ணு பெரியவங்களுக்கு அறிவுரை சொல்ற அளவுக்கு வந்துட்டா" என்று முணுமுணுத்தபடியே சண்டை முடிந்துவிட்ட வருத்தத்தில் கலைந்து சென்றனர். ஆனால், அந்த அம்மா, நான் சொன்னதில் உள்ள உண்மையை உணர்ந்து அந்தப் பாட்டியிடம் பிறகு மன்னிச்சுக்கச் சொன்னார்.
- **யூ.சப்பியா**, ஒன்பதாம் வகுப்பு.





கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி.

2020ஆம் ஆண்டில் எனது கிராமம் விவசாயத்தில், சுற்றுச்சூழலில், பொருளாதாரத்தில், கல்வி மற்றும் பல வகைகளில் எனது கிராமம் முன்னேறி சிவகங்கை மாவட்டத்தின் சிறந்த கிராமமாக விளங்கும் என்று உறுதி அளிக்கிறேன்.

விவசாயம்

"இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம்" என்றனர் முன்னோர்கள். நான்




மழை நீர்
உயிர் நீர்
J. RUBAN JOSE
XI-D





2020 நீர் வளமிக்க
எனது கிராமம்
D. Vinitha
X-Kovai Mariyalaya

# கர்மவீரர் காமராஜர்!



பூக்களின் நடுவே ஒரு ரோஜா
மக்கள் மனதிலே காமராஜா!

பண்புமிக்க ஏழையர்
படித்திடாது உயர்ந்தவர்
துடிப்புமிக்க நல்லவர்
தூயவாழ்க்கை நிறைந்தவர்.

உழைப்பினிலே சிறந்தவர்
உண்மைத்தொண்டு புரிந்தவர்
தழைக்கும் தொழில் கண்டவர்
தாயகத்தைக் காத்தவர்.

தேர்ந்த தியாகம் செய்தவர்
தேசம் காத்து மகிழ்ந்தவர்
நேர்ந்த அரசை எதிர்த்தவர்
நெடிது சிறையில் இருந்தவர்.

முதல்வர் பதவி வகித்தவர்
முன்னேற்றமே கொடுத்தவர்
மதிய உணவு தந்தவர்
மக்கள் வாழ வாழ்ந்தவர்.

கல்விக் கண்ணைத் திறந்தவர்
காமராஜர் பெருந் தலைவர்
பல விகிதத்தில் வல்லவர்
பாராட்டுக் குரியவர்!

❑ **சு.பானுமதி**
ஆறாம் வகுப்பு
தாமரை மாலைநேரப் பள்ளி
ஈராச்சி.

விருதுநகரில் இருந்து தமிழகத்திற்கு
உயரிய விருதாய் வந்தாய்.

புத்தகம் சுமக்கும் வேளையில்
பொது வாழ்க்கையை பொதியாய் சுமந்தாய்
அதற்கு சாட்சியாய் தமிழகத்தையும்
ஒன்பது ஆண்டுகள் ஆண்டாய்.

பெறுவதெல்லாம் நமக்கில்லை
ஊருக்குத்தான் என உழைத்தாய்.
கூடுதலாய் செலவிற்கு
தாய் முப்பது ரூபாய் கேட்டு,
தர மறுத்தாய்.

தன் தேவை தீருமுன்
பிறர் குறை தீர்த்திட்டாய்.
எல்லாரும் கல்வி பெற
ஊரெங்கும் பள்ளிகள் திறந்தாய்
ஏழைகளும் கல்வி பெற
ஊரெங்கும் பள்ளிகள் திறந்தாய்.

ஏழைகளும் கல்வி பெற
மதிய உணவு தந்தாய்
கல்வியே செல்வமென ஊருக்கு
தந்து சென்றாய்.

பட்டப்படிப்புகள் உன்னிடம்
இல்லையென்றாலும் - நீ
ஒரு பல்கலைக் கழகமாகவே
வலம் வந்தாய்.

கர்மவீரர் நீங்கள்
தென்னகத்தின் காந்தி நீங்கள்
என்றும் உம்மை
வணங்குகிறோம் நாங்கள்.

❑ **ஜெ. அமலா ஷெரின்**
ஆறாம் வகுப்பு
தாமரை மாலைநேரப் பள்ளி
ஈராச்சி.

2020

2020ல் இந்த உலகம் அமைதியான, போர் இல்லாத உலகமாக மாறும். தகவல் தொழில் நுட்பத்தில் புதிய கண்டுபிடிப்புகள் ஏற்படும். விண்வெளி ஆராய்ச்சிகள் மேம்படும். கல்வி அறிவு பெற்றவர்களின்எண்ணிக்கை அதிகரிக்கும். இளைஞர்கள் அனைவரும் நாட்டு முன்னேற்றத்திற்காக, உலக அமைதிக்காக ஒற்றுமையாக பாடுபடுவார்கள் என நம்புகிறேன்.

நாளைய உலகம் இன்றைய இளைஞர்கள் கையில் உள்ளது. பள்ளி மாணவ மாணவிகளாக இருக்கும் நாம் எதிர்கால எதிர்கால உலகத்தை செதுக்கி சீர்செய்யும் சிற்பிகளாக மாறவேண்டும். முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் இளைஞர்களை கனவு காணச் சொன்னார். எதிர்காலத்தில் இந்தியாவை உலக அரங்கத்தில் உயர்த்த கனவு காணச்சொன்னார்.

கல்வி அறிவு:

2020ல் எல்லோரும் படிப்பறிவு பெற்றவர்களாக இருப்பர். மக்களிடம் புதிய சிந்தனை உருவாகும். ஒவ்வொரு மாநிலங்களுக்கிடையேயும் நாடுகளுக்கிடையேயும் பரஸ்பர அமைதி உண்டாகும்.

சுற்றுச்சூழல்:

2020ல் நமது சுற்றுச்சூழல் பாதுகாப்பாக இருக்கும். தூய்மையான காற்று, சுத்தமான நீர். இறைச்சல் இல்லா நகரம். இப்படியாக எல்லாவற்றையும் உருவாக்குவோம். இயற்கையை பாதுகாப்பவர்களாக இருப்போம்.

அறிவியல் ஆராய்ச்சி

புதிய அறிவியல் தொழில்நுட்பம், புதிய விண்வெளி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். செவ்வாய் கிரகத்திற்கு செல்வதற்கான ஆராய்ச்சி தற்போது நடைபெறுகிறது. அந்த ஆராய்ச்சியில் மனிதர்களுக்கு சாதகமான அம்சங்கள் கிடைத்திருக்கும்.

மத நல்லிணக்கம்:

மதங்களுக்கு இடையிலான பூசல்கள், சண்டை சச்சரவுகள் நீங்கும். மத நல்லிணக்கம் ஏற்படும்.

போர்

உலக அமைதிக்காக பாடுபடும் தலைவர்கள் உருவாவார்கள். இன்று நாடுகளுக்கிடையே நடைபெறும் போர்கள் முடிவுக்கு வரும்.

பெண்கள் விழிப்புணர்வு

பெண்கள் அனைத்து துறைகளிலும் திறமையுள்ளவராய் இருப்பர். பெண்கள் முழு சுதந்திரம் பெறுவர்.

கணிப்பொறி செயல்பாடு:

அரசின் அனைத்து செயல்பாடுகளும் கணிப்பொறிமயமாக்கப்படும். மாணவ மாணவியர் கணிப்பொறியின் உதவியுடனேயே கல்வி கற்பர்.

பா. மகாலட்சுமி
பத்தாம் வகுப்பு
கோவை மரியாலயா.



# அன்னை தெரசா

❑ பெ.பிரியதர்ஷினி
எட்டாம் வகுப்பு
மாலைநேரப் பள்ளி
வேம்பணி

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பது தமிழில் பொருள் நிறைந்த பொன்மொழி. இந்தப் பொன்மொழிக்கேற்ப வாழ்ந்துகாட்டிவர் அன்னை தெரசா.

## பிறப்பு

இவர் யூகோஸ்வாரியா நாட்டில் செகாப்ஜி என்ற கிராமத்தில் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் நாள் பிறந்தார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் அக்னெஸ் காணஷா பொஜாக்ஷா வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையே முக்கியமானது என்பதைத் தெரிந்து கொண்டார். இவருக்கு 12 வயதாகும் போது இறைவனது உள்ளுணர்வைப் பெற்றார். ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வதற்காக இறைவன் தன்னைப் படைத்திருந்தார் என்பதை புரிந்துகொண்டார்.

## அர்ப்பணிப்பு

யூகோஸ்லேவியாவில் உள்ள லொரேட்டா என்ற கன்னி மடத்தில் சேர்ந்து பணிபுரிய விரும்பினார். அதற்குரிய பயிற்சிகளை அயர்லாந்தில் பெற்றார். அன்னை தெரசா தன்னுடைய 15வது வயதில் இந்தியாவில் உள்ள கொல்கத்தாவுக்கு வந்தார். புனித மேரி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியைத் தொடங்கினார். ஓய்வு நேரங்களை இறை வழிபாட்டில் கழித்தார். கொல்கத்தாவுக்கு வந்த பிறகு 'தெரசா' என்று அழைக்கப்பட்டார்.

## சேவை உள்ளம்

கல்விப்பணி செய்வதால் மட்டுமே தெரசா மனநிறைவு அடையவில்லை. ஏழைகளுக்கு சேவை செய்யவேண்டும். அகதிகளுக்கு உதவி செய்ய வேண்டும். அனாதை குழந்தைகளை பராமரிக்க

வேண்டும் என்று விரும்பினார். தொழுநோயாளிகளுக்குத் தொண்டு செய்யவும், தெருவின் ஓரங்களில் விலங்குகளைப் போல மரணத் துடன் போராடிக் கொண்டு இருப்பவர்களுக்கு சேவை செய்யவும் முடிவு எடுத்தார்.

ஒரு பெண்ணால் பொது மக்களுக்குத் தனியாக தொண்டாற்ற முடியாது என்று பலரும் கூறினார்கள். அவர் பயிற்சி பெற்ற லொரேட்டா மடமும் இதே கருத்தைக் கூறியது. இறுதியில் ரோம் நகரத்தில் இருந்த போப்பாண்டவர் தெரசாவின் சேவைப் பணிகளுக்கு அனுமதி அளித்தார். அதன் மூலம் அன்னை மகிழ்ச்சியடைந்தார். அன்னை அன்பே உருவானவராக விளங்கினார். ஏழைகள் மீது அன்பு செலுத்துவதற்கும் ஏழைகளை அறிந்து கொள்வதற்கும் நாமும் ஏழையாக மாற வேண்டும் என்று கூறினார். 1950ஆம் ஆண்டு 'நிர்மல் ஹிருதயா' என்ற பெயரில் தொண்டு இல்லத்தை நிறுவினார். இதற்கு 'தூய மனது' என்பது பொருள். அங்கு உருக்குலைந்த உடல்களில் புண்களோடு உள்ளவர்களை தங்க வைத்தார். அவர்களது புண்களைக் கழுவி சுத்தப்படுத்தினார். உடல் நலம் இல்லாதோர், தொழுநோயாளிகள் ஆகியோருக்கும் மருத்துவம் செய்ய பாட்னாவில் உள்ள மெடிக்கல் மெஷினரியில் பயிற்சி மேற்கொண்டார். எளிமையின் சிகரமாக விளங்கினார்.

### மிஷனரிஸ் ஆஃப் சாரிட்டி

அமைப்பின் ஊழியர்கள் அணியும் நீல நிற கோடுகளைக்கொண்ட வெள்ளை நிறத்தால் ஆன புடவையை அணிந்து கொண்டார். ஏழ்மை, தூய்மை, கீழ் படிதல், இலவச சேவை என்ற நான்கு எண்ணங்களின் அடிப்படையில் செயல்படவேண்டும் என்று தெரசா விரும்பினார்.

### சிறப்புகள்:

*1962ஆம்* ஆண்டு மத்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி சிறப்பித்தது. அதே ஆண்டு ஃபிலிப்பைன்ஸ் நாடு அந்த நாட்டின் உயரிய விருதான மாக்சேசே விருதை தெரசாவுக்கு வழங்கி கௌரவித்தது. *1972*ஆம் ஆண்டு நமது நாட்டின் ஜவஹர்லால் நேரு சர்வதேச விருதைப் பெற்றார். *1975* ஆம் ஆண்டு லண்டன் நகரில் வழங்கப்படும் டெம்பிள்டன் பரிசுவழங்கப்பட்டது. நமது நாட்டின் மிக உயர்ந்த 'பாரத ரத்னா' விருது *1976*ஆம் ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டது. *1979*ஆம் ஆண்டு உலகமே போற்றும் 'நோபல் பரிசு' சமாதானத்திற்காக அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது.



'அன்புதான் வாழ்க்கை, அன்பே கடவுள்' என்று வாழ்ந்த அன்னை தெரசா, *1997*ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அதே ஆண்டு தமிழக அரசு மகளிர் பல்கலைக் கழகத்தைத் தொடங்கியது. அந்தப் பல்கலைக் கழகத்துக்கு அன்னை தெரசாவின் பெயரைச் சூட்டியது.





# ஊடக உலகம்

❑ டி.ஜீவிதா
பன்னிரண்டாம் வகுப்பு
கோவை மரியாலயா

பரந்து விரிந்துள்ள உலகம், இன்று உள்ளங்கை அளவில் விரல்நுனிக்குள் வந்துவிட்டது. இதற்குக் காரணம் இன்றைய சமூகத் தொடர்பு ஊடகங்களே.

## சமூகத் தொடர்பு ஊடகங்கள்

அறிவியலின் வியத்தகு முன்னேற்றத்தில் மனிதர்கள் பல அதிசயங்களை ஆற்றியுள்ளனர். படைக்கப்பட்ட பொருட்களில் இருந்து தமது அறிவாற்றலைப் பயன் படுத்தி கடவுளின் உதவியோடு, பல தொழில் நுணுக் கங்களைக் கற்றுள்ளனர். பல பொருள்களைக் கண்டு பிடித்துள்ளனர். தனிமனிதரை மட்டுமின்றி, மக்கள் சமூகங்களையும் மனித குலம் முழுவதையும் இயல் பாகச் சென்றடைந்து இயக்கவல்ல கருவிகள் இக்கண்டுபிடிப்புகளுள் முக்கிய இடம்பெறுகின்றன. அச்சு வெளியீடுகள், திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி முதலிய இக்கருவிகளைச் சமூகத் தொடர்பு ஊடகங்கள் என்கிறோம். இவற்றுடன் தொலைபேசி, கணினி, செல்போன் இவற்றுடன் அலைபேசி, இன்டர்நெட் எனப்படும் இணையதளம், இமெயில் எனப்படும் மின்னஞ்சல், சி.டி. எனப்படும் குறுந்தகடு, ஒலி ஒளி நாடாக்கள் போன்றவை இன்று மனிதர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளத் துணைபுரியும் ஆற்றல் மிகுந்த கருவிகள் ஆகும்.

உலகின் ஒரு கோடியில் நடைபெறும் நிகழ்வுகளை உடனடியாக நாம், மறு கோடியில் நாம் கண்டும் கேட்டும் மகிழ உதவும் ஊடகங்களாக இவை திகழ்கின்றன. சமூகத் தொடர்பு ஊடகங்களின் துணையால் செய்திகளையும் எளிதாக மக்களிடையே பரப்பி வருகின்றனர். மக்கள் தமது ஓய்வு நேரத்தை இனிமையாக கழிக்கின்றனர். சமூகத் தொடர்பு ஊடகங்களை தேர்ந்து, தெளிந்து, கடவுளின் திட்டத்திற்கேற்ப இவற்றைப் பயன்படுத்தும்போது பற்பல நன்மைகள் விளைகின்றன. அதேவேளையில் இவற்றைத் தவறாகப் பயன்படுத்தும் போது மனித இனம் பல்வேறு தீமைகளுக்கு உள்ளாகிறது. பலரின் அழிவுக்கும் காரணமாகிறது.

சமூகத் தொடர்பு ஊடகங்களின் பண்புகள் மூன்று

1. கற்பித்தல்
2. தகவல் பரிமாற்றம்
3. பொழுதுபோக்கு.

### தாக்கங்கள்

சமூகத் தொடர்பு ஊடகங்கள் மனித முன்னேற்றத்திற்கும் சமூக வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரிகின்றன. ஆயினும் இவற்றின் தாக்கங்களினால் சமூகம் பெரும் சீரழிவுகளுக்கு உள்ளாகி வருவதையும் நம்மால் மறுக்க இயலாது. சமூகத் தொடர்பு ஊடகங்களின் நன்மைகள் யாவை? தீமைகள் யாவை? என்பதை ஆய்வு செய்து கருத்துகளை ஒப்பிட வேண்டும்.

### பயன்கள்

சமூகத் தொடர்பு ஊடகங்கள், செய்திகளை உடனுக்குடன் அறியவும் நிகழ்வுகளைக் காணவும் உதவுகின்றன. நல்வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. பொழுதுபோக்க பயன்படுகின்றன.

அறிவை வளர்த்துக் கொள்ள உதவுகின்றன. படைப்பாற்றலை வளர்க்கின்றன. பண்பாட்டை வளர்க்க உதவுகின்றன. பொருளாதார மேம்பாட்டுக்கு துணை செய்கின்றன. ஊர்களையும் நாடுகளையும் கண்டங்களையும் ஒன்றிணைக்கின்றன. மக்களிடையே ஒற்றுமையையும் சமூக உறவையும் ஆழ்ந்த அன்பையும் கூட்டு முயற்சியையும் வளர்க்கின்றன. நான் என்ற குறுகிய மனப்பான்மையைத் தகர்த்தெறிந்து, பரந்த மனப் பான்மை உருவாகின்றன.

### தீமைகள்

சமூகத் தொடர்பு ஊடகங்கள், பண்பாட்டுச் சீரழிவுகளை ஏற்படுத்துகின்றன. தனிமனித வழிபாட்டிற்கு வழிவகுக்கின்றன. நுகர்வு கலாச்சார வெறியைத் தூண்டுகின்றன. மக்களைச் சோம்பேறிகளாக்குகின்றன. சுயமாகச் சிந்தித்து செயலாற்றும் ஆற்றலை இழக்கச் செய்கின்றன. பாலியல் சீரழிவுகளுக்கு காரணமாகின்றன. வன்முறைகளைத் தூண்டுகின்றன. தற்கொலை, தோல்வி மனப்பான்மை, கோழைத்தனம் ஆகியவற்றை மிகுதியாக்குகின்றன. குடும்ப உறவுகளைச் சிதைக்கின்றன. ஆன்மிகக் காரியங்களில் ஈடுபாடற்ற நிலையை உருவாக்குகின்றன.

### இளையோரை பாதிப்பவை

சமூகத் தொடர்பு ஊடகங்களின் தாக்கம் என்றும் இல்லாத அளவிற்கு அதிகமாக உள்ளது. இவற்றில் நம் போன்ற இளையோரை மிகவும் பாதிப்பவை:

1. அச்சு வெளியீடுகள்
2. வானொலி
3. திரைப்படங்கள்
4. இணையதளம்.

### அச்சு வெளியீடுகள்

நாள், வார, மாத, ஆண்டு இதழ்கள், புத்தகங்கள், துண்டு பிரசுரங்கள் போன்ற பலவகை அச்சு வெளியீடுகள் ஒரு நாட்டின் ஆற்றல்மிகு சமூகத் தொடர்பு ஊடகங்களாகப் பயன்படுகின்றன. இவை

நம்மைச் சுற்றியுள்ள உலகின் முகத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இவை அளிக்கும் தொடர்பு, எழுத்து வடிவிலும் சித்திர வடிவிலும் இருப்பதால், அத்தொடர்பு அழியாததாகவும் நிலையானதாகவும் இருக்கின்றது. எனவே தொடர்பு பெறுநர் அவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம். ஆகவே நல்ல இதழ்களைப் படியுங்கள். அவற்றில் பாராட்டுதலுக்குரியவை கண்டால் இதழாசிரியருக்கு எழுதுங்கள். நமக்கு முரண்பாடான கருத்துகளைக் கண்டால் கண்டனக்குரல் எழுப்பலாம். கவிதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக் கோவைகளையும் பத்திரிகைகளுக்கு எழுதுவதன் மூலம் நம் எழுத்தறிவினை வளர்க்கலாம்.

### வானொலி

நம் நாட்டில் இன்று படிப்பு வாசனையற்ற பாமர மக்களாலும் பெரும் வாரியாகப் பயன்படுத்துபவருக்கு இது மிகக்குறைந்த செலவில் நிறைந்த பயனளிக்கிறது. மற்றெல்லா தொடர்பு சாதனங்களையும் விட சிறந்த தொடர்பு சாதனம் வானொலியே. இது மக்களோடு வெகு விரைவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய சாதனம்.

### திரைப்படங்கள்

திரைப்படம் என்பது மக்களுக்கு மிக அதிகமாக அறிமுகமான ஓர் ஊடகம். அன்று திரையரங்குகளில் மட்டுமே திரையிட்ட திரைப்படங்கள் இன்று எல்லா வீடுகளிலும் சின்னத்திரை வழியாக நாள் முழுவதும் ஒளிபரப்பப்படுகின்றன. இதனால் வீட்டில் உள்ளோரின் வாழ்க்கை பல நிலைகளில் பாதிக்கப்படுகிறது. நல்ல கருத்துகளையும் மதிப்பீடுகளையும் மக்களிடையே பரப்பிட திரைப்படங்கள் சிறந்த கருவியாக இருக்கின்றன. அதேவேளையில் தீமைகளையும் விளக்குகின்றன.

திரைப்படங்களால் நம் போன்ற இளையோர் படிப்பில் கவனக்குறைவு ஏற்படுவதால் பாதிக்கப்படுகின்றனர். வன்முறை எண்ணங்களுக்கு உள்ளாகின்றனர். தனிமனித வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். சாதிய உணர்வுகளுக்கு அடிடைப்படுகின்றனர். மதவெறிக்கு ஆளாகின்றனர். தீயபழக்கங்களைக் கற்றுக்கொள்கின்றனர். வாழ்க்கையின் இலக்கை மறந்து விடுகின்றனர். பல்வேறு குழப்பங்களில் சிக்கித் தவிக்கின்றனர்.

### காரணங்கள்

படைப்பாற்றல் என்ற பெயரில் நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துகள் திணிக்கப்படுகின்றன. சுதந்திரம் என்ற பெயரில் வன்முறைச் சிந்தனைகளும் செயல்களும் தூண்டிவிடப்படுகின்றன. புரட்சி என்ற பெயரில் சாதி, மத, இனவெறி, மொழிவெறி திணிக்கப்படுகின்றன.

### இணையதளம்

கணினி உலகத்தில் வாழும் நமக்கு மிகப்பெரிய சவாலாக இருப்பது இணைய தளம். இதன் வழியாக உலகமே ஒரு நொடிப் பொழுதில் இணைக்கப்படுகிறது. பல்வேறு நிகழ்வுகள் காட்சிகள், செய்தித்தாள், செய்தித் தொகுப்புகள், அறிவியல் சார்ந்த தகவல்கள் ஆகியவை உடனுக்குடன் பரிமாறப்படுகின்றன. இவ்வாறு இணையதளத்தின் பயன்பாடு சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளது. இந்த இணையதளம் நன்மைக்குப் பயன்படுவது போன்றே தீமைக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, இணைய தளத்தைக் கையாளுதல், புள்ளவிவரங்கள், உடனடி செய்திகள் போன்றவற்றில் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். இணைய தளத்தின் வழியாக வாழ்க்கைக்குப் பயன்படும் அறிவைப் பெருக்க உதவுகின்ற பல நிகழ்வுகளைச் சின்னத் திரையில் காண்கிறோம். அதேவேளை

யில் தேவையற்ற விளம்பரங்கள், செய்திகள், கடிதப் போக்குவரத்துகள் ஆகியவற்றின் மேல் கவனத்தை செலுத்தி நேரத்தையெல்லாம் வீணடிக்கக்கூடாது. இணைய தளத்தில் அதிகமாக ஈடுபாடு காட்டுவதில் உன்னையே தனிமைப் படுத்திக்கொண்டு உடல் உள்ளக் கோளாறுகளுக்கு உள்ளாகக்கூடாது.

**இறுதியாக...**

சமூகத் தொடர்பு ஊடகங்கள் உன்னை ஆட்டிப் படைக்கும் ஆற்றல் மிகு கருவிகள் என்பதை நீ அறிவாய். அவை பரப்புகின்றவற்றை நீ வாசிக்கின் றாய். பார்க்கின்றாய், கேட்கின்றாய். இதில் நமக்கு மிகுந்த பொறுப்பு உள்ளது. அளவுடனும் கட்டுப்பாடுடனும் அவற்றை பயன்படத்துவதோடு சரியான நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடு. அறநெறி யிலும் கலைத்திறனிலும் சிறந்தவை களுக்கு முன்னிடம் கொடுத்து நம் பார்வை, கேட்பவை, படிப்பவை பற்றி ஆழ்ந்தறிய முயற்சி செய்ய வேண்டும். அவற்றை சீர்தூக்கிப் பார்த்து நன்மையை எடுத்துக்கொண்டு தீமையை தவிர்த்து விட்டு அவற்றை திறனாய்வு செய்கையில் பெரியவர்களின் துணையை நாட வேண்டும். ஒழுக்க வாழ்வுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய காட்சிகள் போன்ற வற்றை விலக்கி நவீன சமூகத் தொடர்பு ஊடகங்களின் துணையுடன் உனது அறிவையும் நற்பண்புகளையும் அறநெறி வாழ்க்கையையும் வளமாக்கிக் கொண்டு திறமைகளை வளர்த்து சமூகத் தொடர்பு ஊடகங்கள் நம்மை ஆட்டிப் படைக்காமல் நாம் அவற்றிற்கு அடிமை யாகும் அளவுக்கு மாறிவிடாமல் கவன மாக செயல்பட வேண்டும். ஊடகங்கள் இல்லையேல் இன்றைய காலகட்டத்தில் ஒன்றுமே செய்ய இயலாது. ஊடகங்கள் அனுதினமும் நமக்கு மிகவும் பயனுள் ளதாக உள்ளன. எனவே அவற்றை பயன் படுத்தி நன்முறையில் நமது வாழ்வை சிறந்து விளங்க வேண்டும்.

# எனக்குப் பிடித்த பழமொழிகள்...

❑ ஏ.கற்பகம்
எட்டாம் வகுப்பு
ஜீவபூக்கள் மாலைநேரப் பள்ளி
வாலம்பட்டி.

1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
2. தன் கையே தனக்கு உதவி
4. நேர்மையே மிகச்சிறந்த கொள்கை.
5. கடின உழைப்பிற்கு ஈடு இணை ஏதுமில்லை.
6. கல்வி கற்றலின் சிறந்த வெளிப்பாடு சகிப்புத்தன்மையே.
7. காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது.
8. அவனின்றி அணுவும் அசையாது.
9. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
10. சிரிப்பே சிறந்த மருந்து.
11. ஆழம் தெரியாமல் காலை விடாதே.
12. மனம் இருந்தால் மார்க்கமுண்டு.
13. அனுபவமே அருமையமான ஆசான்.
14. அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்.
15. தோல்வியே வெற்றிக்கு முதற்படி.

**விடுகதைகளுக்கான விடைகள்:**

1. எறும்பு, 2. உளுந்து, 3. ஆவணி, 4.கொசு, 5. வைக்கோல், நெல் 6.தொலைபேசி, 7. வானம், 8. மயில் 9. புளி, 10. குடை, 11, ஆவணி, 12. வண்ணத்துப்பூச்சி, 13. பென்சில், 14. ரயில், 15. சூரியன்

# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தை சரியாக பயன்படுத்துவதன் மூலம் லஞ்சம் மற்றும் ஊழலை பெருமளவு கட்டுப்படுத்த முடியும்.

## சட்டம் எதற்கு?

அரசு அலுவலகங்கள் பொது மக்களுக்கு தகவல் சொல்லக் கடமைப்பட்டிருந்தாலும் இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் நீங்கள் கேட்கும் தகவலை அவ்வளவு எளிதில் பெற இயலாது. நீங்கள் தகவல் கேட்டு அனுப்பும் கடிதம் குப்பைக்குக்கூட செல்லும் வாய்ப்பு உள்ளது. ஆனால் இச்சட்டம் இயற்றப்பட்ட பிறகு தகவல் தர மறுத்தால் சட்டத்தை மீறுவதாகும். தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தில் தகவல் கிடைக்கும் வாய்ப்பு உறுதியாகிறது.

## எங்கிருந்து தகவல் பெறலாம்?

மத்திய மாநில அரசு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசு நிதி பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து தகவல் பெறலாம். தனியார் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

## என்ன தகவல் பெறலாம்?

அரசு அலுவலகங்களில் உள்ள கோப்புகள், ஆவணங்கள், சுற்றறிக்கைகள், ஆணைகள், ஈமெயில்கள், நோட் பைல் எனப்படும் அலுவலகக் குறிப்புகள் ஆகியவை பெறலாம். இது தவிர சாலை போடுதல், அரசு கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் மாதிரிகள் கேட்டுப் பெறலாம்.

## எவ்வாறு பெறுவது?

ஒரு தகவல் பெறுவதற்கான தனியான படிவம் ஏதும் கிடையாது. ஒரு சாதாரண வெள்ளைத் தாளில் வேண்டிய தகவல்களை கேட்டு விண்ணப்பிக்கலாம்.

கட்டண விவரம்: மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் தகவல் பெற ரூ. 10 என கட்டணம் நிர்ணயித்துள்ளன. இக்கட்டணத்தை ரொக்கமாகவோ வரைவோலையாகவோ நீதிமன்ற கட்டண வில்லை மூலமாகவோ செலுத்தலாம். நகல் பெறுகையில் ஒரு தாளுக்கு ரூ.2 எனக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## யாரிடம் தகவல் கேட்பது?

ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் உதவிப் பொது தகவல் அலுவலர் அல்லது பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பொதுத் தகவல் அலுவலர்களின் மத்திய அரசுக்கான பட்டியல் www.tn.gov.in என்ற இணைய தளத்திலும் உள்ளன.

## தகவல் ஏன் கேட்கிறோம் என சொல்ல வேண்டுமா?

பிரிவு 6 (2)ன்படி தகவல் கேட்பவர் எதற்காக தகவல் கேட்கப்படுகிறது என்ற

விவரத்தை தெரிவிக்க வேண்டியதில்லை. பதில் அனுப்ப ஒரு தொடர்பு முகவரியைத் தவிர வேறு எந்தவிவரத்தையும் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

### எவ்வளவு நாட்களில் தகவல் பெறலாம்?

பிரிவு 7 (1)ன்படி ஒரு பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்களில் தகவல் தர வேண்டும். கேட்கப்படும் தகவல் ஒரு நபரின் உயிர்ப் பாதுகாப்பு பற்றிய செய்தி யாக இருந்தால் 48 மணி நேரத்தில் தரவேண்டும்.

### மேல்முறையீடு?

பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்களில் தகவல் தர வில்லையென்றால், அல்லது அவர் அளித்த தகவல் திருப்திகரமாக இல்லையென்றால் அந்தந்த துறைகளில் பிரிவு 19ன் கீழ் உள்ள மேல் முறையீட்டு அதிகாரியிடம் 30 நாட்க ளுக்குள் முதல் மேல் முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு அதிகாரி யின் பதில் திருப்திகரமாக இல்லையெனில் 90 நாட்க ளுக்குள் பிரிவு 19(3) ன் கீழ் மாநில தகவல் ஆணை யரிடம் இரண்டாவது மேல் முறையீடு செய்யலாம்.

<u>தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்,</u>

<u>273/378, அண்ணாசாலை (வானவில் அருகில்), தேனாம்பேட்டை, சென்னை 600 018. போன்: 044-24357580, 24312841, 24312842.</u>

### தகவல் தராவிட்டால் தண்டனை உண்டா?

பிரிவு 20ன் கீழ் குறிப்பிட்ட காலத்துக்குள், உரிய நியாய மான காரணங்கள் எதுவு மின்றி தகவல் தர மறுத் தாலோ, தவறான தகவல் அளித்தாலோ பிரிவு 20ன் கீழ் அதிகபட்சமாக ரூ. 25,000 அபராதம் மற்றும் துறை நடவடிக்கை எடுக்க தகவல் ஆணையத் துக்கு அதிகாரம் உண்டு.

### விதி விலக்குகள்

பிரிவு 8ன்படி நாட்டின் இறையாண்மைக்கு ஊறு விளைக்கும், நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கும், சட்டமன்ற, நாடாளுமன்ற உரிமைகள் மீறும், வியாபார ரகசியங்கள், வெளி நாடுகளி லிருந்து அரசுக்கு வந்த ரகசியங்கள், காவல் துறை யின் ரகசிய தகவலாளர் களுக்கு ஆபத்து ஏற்படுத் தும் தகவல்கள், புலனாய் வில் உள்ள வழங்குகள், அமைச்சரவை கூட்ட குறிப்புகள் போன்றவை இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட் டுள்ளது.

மேலும் பிரிவு 24ன் கீழ் மத்திய மாநில அரசுகளால் பட்டியலிடப்படும் பாது காப்பு மற்றும் உளவுத்துறை நிறுவனங்கள் ஆகியன இச்சத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

# பேச்சாளரானால்...

❑ .கற்பகம்
நான்காம் வகுப்பு
பூலப்பாளையம், ஈரோடு



இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் அப்துல் கலாம், பத்து வயது சிறுமியிடம், "உன் எதிர்கால ஆசை என்ன?" என்று கேட்டார். அச்சிறுமி எந்தவித தயக்கமும் இன்றி "வளர்ச்சி யடைந்த இந்தியாவில் நான் வாழ விரும்பு கிறேன்" என்று பதில் கூறினாள். நான் பேச்சாளரானால், இந்தியாவின் வளர்ச்சி பற்றி வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மேடைகளில் பேசுவேன்.

## நாடு வளர்ந்திருக்கிறது

கடந்த 20 ஆண்டுகளாக நாம் வளர்ந்து வரும் நாடாகவே இருந்தோம். வளர்ந்து விட்ட நாடாக பார்க்கின்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாலான துறை களில் 10 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள் ளோம். நாட்டின் வறுமைக்கோடு குறுகி வருகின்றது. பால்வள உற்பத்தி, தொலைத் துறை, செயற்கைக் கோள்களை அனுப் புதல் முதலியவற்றில் நாம் முதலாவதாய் இருக்கின்றோம். கோதுமை, அரிசி ஆகிய வற்றின் உற்பத்தியில் இரண்டாவதாய் இருக்கின்றோம். இராணுவம், விமானம், கப்பல், அணுசக்தி, கணினி, மடிக்கணினி, இணையதளம், மின்னணு தொழில்நுட்பக் கருவிகளை உருவாக்குதல் எனப் பல துறை களில் மிகுந்து முன்னேற்றம் கண்டுள் ளோம். இதன்மூலம், "வானையளப்போம், கடல் மீனை அளப்போம், சந்திர மண்ட லத்தியல் கண்டு தெளிவோம்" என்னும் பாரதியின் கனவை நிறைவேற்றிக் கொண் டிருக்கிறோம்.

## மனம் வளர்ச்சியடையவில்லை

ஆனால், நம் நாட்டிலெங்கும் சாதி, சமய வெறி மறையவில்லையே. மூடப்பழக் கங்கள் குறையவில்லையே; மறையவில் லையே. ஏன் இந்த நிலை.

## அந்நிய மோகம்

வெளிநாட்டுப் பொருள்கள், வெளி நாட்டுத் தொழில்நுட்பம், வெளிநாட்டு கலாசாரம் ஆகியவற்றைத்தாம் நாம் விரும் புகிறோம். அந்நியப் பொருள்கள் மீது அளவிலா மோகம் கொண்டுள்ளோம். நம் நாட்டவர் வெளிநாடுகளுக்குச் சென்றால், அந்நாட்டுச் சட்ட திட்டங்களுக்குப் பணிந்து நடந்து மரியாதை தருகின்றனர். ஆனால், இந்திய மண்ணைத் தொட்ட வுடனேயே தெருவில் குப்பைகளைப் போடுகின்றனர். ஏன் இந்த மனப்போக்கு? எல்லாவற்றையும் அரசாங்கமே செய்ய வேண்டும் என்று கருதுகின்றோமே. கீழே கிடக்கும் வீணான பொருளைக்கூட

எடுத்து குப்பைத் தொட்டியில் நாம் போடுவதில்லையே, ஏன்?

'மழை பெய்யவில்லையே' என்று குறை கூறுகின்றோம். மரக்கன்றுகளை வளர்க்கிறோமா? "சாக்கடை ஆறாய் ஓடுகிறது" என்று சொல்கிறோம். தடுப்பதற்கு நாம் முயற்சி செய்தோமா?

## நாமும் சமுதாயத்தில் ஓர் அங்கம்

வரதட்சணை போன்ற சமூகப் பிரச்சினைகள் பற்ற காட்டுக்கூச்சல் போட்டு எதிர்ப்புகளைத் தெரிவிக்கின்றோம். 'வரதட்சணை வாங்கக்கூடாது' என்று மேடை ஏறி முழங்குகிறோம். ஆனால், நம் குடும்பத்தில் மகனுக்குத் திருமணம் என்றால் பெண் வீட்டாரிடம் வரதட்சணை வாங்கிறோம். ஏன் இந்த முரண்பாடு?

சமுதாயத்தில் நாமும் ஓர் அங்கம் எனக் கருதியிருந்தால் இவ்வாறு பேச்சும் செயலும் வெவ்வேறாய் இருக்குமா? இந்த நிலை அடியோடு மாறவேண்டும்.

## இறுதியாக...

'நாம் இருக்கும் நாடு நமது என்று அறிந்தோம்' என்று பாடினார் மகாகவி பாரதி. நாம் அப்படி கருதுவதில்லை என்பதுவே உண்மை. சமுதாயம் சீரடைய நாம் எதையும் செய்ய விரும்புவதில்லை. ஏன்? பணம் திரட்டுவதையே குறிக்கோளாய் கொண்டதினால்... இந்நிலை மாற வேண்டும், மனம் மாறவேண்டும். நான் பேச்சாளரானால், என் நாவு இக்கருத்துகளை முழங்கும்.

**கீ**ரியம்பட்டி மக்கள் மழை காலங்களில் ஆற்றைக் கடந்து செல்ல மிகவும் சிரமம் அடைகின்றனர். அப்படி அவர்கள் ஆற்றில் இறங்கி கடந்து செல்லவில்லை என்றால், 3 கிலோமீட்டர் சுற்றிக் கொண்டுதான் செல்லவேண்டும். இந்தப் பிரச்சினையை குழந்தைகள் பாராளுமன்றத்தில் பேசினர். ஆற்றுப் பாலத்தில் பாலம் அமைத்துத்தரக் கோரி பஞ்சாயத்து தலைவரிடம் மனு கொடுப்பது என கூட்டத்தில் முடிவெடுத்தனர். அதன்படி போக்குவரத்துத் துறை அமைச்சர் கலைச்செல்வி 29.10.2011 அன்று மற்ற அமைச்சர்களுடன் ஊர் தலைவரைச் சந்தித்து அந்த மனுவை கொடுத்தனர். அதனைப் பெற்றுக் கொண்ட பஞ்சாயத்து தலைவர் அதை சத்தமாகப் படித்துக் காண்பித்து, அந்தப் பாலத்தை விரைவில் கட்டித்தருவதாக உறுதி அளித்தார்.

**ஆ**த்துப்பட்டி அக்கம் பக்கத்து குழந்தைகள் பாராளுமன்றத்தினர் இன்னாசிபுரம் முதல் ஆத்துப்பட்டி வரையிலான சாலை ஓரத்தில் மரக்கன்றுகளை நடுவது என தீர்மானித்தனர். இதனை சுற்றுச்சூழல் அமைச்சர் ஆனந்தி குழந்தைகள் பாராளுமன்ற கூட்டத்தில் பேசி, நிதி அமைச்சரிடம் நிதிப் பெற்று, மரக்கன்றுகளை வாங்கி 2011 ஜூன் 5ஆம் நான், உலக சுற்றுச்சூழல் தினத்தன்று அந்த மரக்கன்றுகளை நடும் விழாவை சிறப்பாக நடத்தினர். பங்கு தந்தை வருகை தந்து உலக வெப்பமயமாக்கலை பற்றி கூறி ஆசி வழங்கி, மறக்கன்று நடும் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். கிராமத்து பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**தி**ண்டுக்கல் மாவட்டம் உலகம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகள் பாராளுமன்றத்தினர் அனைவரும் இணைந்து 2012ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையை சிறப்பாக கொண்டாடினர். நிதி திரட்டி கிராமத்திலுள்ள சிறாருக்கு நோட்டு, பேக் ஆகியவற்றை வழங்கினர். இந்த செய்தி மாலை மலர் பத்திரிகையில் வெளிவந்து மக்கள் மத்தியில் ஒரு நல்ல வரவேற்பை பெற்றது.

**தூ**த்துக்குடி மாவட்டம், டி.சண்முகபுரம் கிராமத்தில் ஒரு வீட்டு முன்வாசலில் 30 குழந்தைகள் பங்கேற்கும் மாலை நேர வகுப்பு நடைபெற்றது. குழந்தைகள் பாராளுமன்றமும் இங்குதான் நடைபெற்றது. இச்சூழல் குழந்தைகளுக்கு ஏற்றதாக இல்லை. மேலும் மழைக்காலங்களில் அந்த வாசல் சேறு சகதி ஆகிவிடும். ஆகவே, மழைக்காலங்களில் மாலை நேர வகுப்போ, குழந்தைகள் பாராளுமன்றமோ நடத்தமுடியாது. இந்தப் பிரச்சினையை குழந்தைகள் பாராளுமன்ற கூட்டத்தில் பேசி, மனு ஒன்றை எழுதி, அந்த ஊர் தலைவரிடம் கொடுத்தார்கள். அந்த ஊர் தலைவர் அங்கு உள்ள குடோன் அறையை சுத்தம் செய்துகொடுத்தார். இப்போது அந்த இடத்தில்தான் மாலைநேர வகுப்பும் குழந்தைகள் பாராளுமன்ற கூட்டமும் நடைபெறுகிறது. முன்பு மாலை நேர வகுப்புக்கு 30 பேர் வந்தவர்கள் இப்போது 45 பேராக உயர்ந்துள்ளனர்.

**தி**ருச்சி மாவட்டம், அம்பேத்கர் நகர், காந்தி நகர் ஆகிய இரண்டு கிராமத்து அக்கம் பக்கத்து குழந்தைகள் பாராளுமன்றத்தினர் அப்பகுதியில் நிறைய குழந்தைகள் பள்ளியிலிருந்து இடைவிலகல் ஆவதை உணர்ந்து அப்பகுதியில் ஒரு கலை நிகழ்ச்சியை

நடத்தினர். அந்நிகழ்ச்சியில் வீதி நாடகம் நிகழ்த்தி கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தினர். கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பதையும் எடுத்துரைத்தனர். இந்த நிகழ்ச்சியின் இறுதியில் அந்தப் பகுதியில் உள்ள குழந்தைகள் அனைவரும் இனி வரும் காலங்களில் பள்ளிக்கு தொடர்ந்து செல்வோம் என உறுதி எடுத்துக் கொண்டனர்.

**தூ**த்துக்குடி மாவட்டம், காட்டுநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறிஞ்சி மலர்கள் அக்கம் பக்கத்து குழந்தைகள் பாராளுமன்றத்தை தொடங்கினர். இதன் மூலம் அவர்கள் நிறைய பயிற்சிகளை பெற்றனர். குழந்தைகளுக்கான பிரச்சினைகள் என்ன, பிரச்சினைகளை எவ்வாறு அடையாளம் காண்பது, அதற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதற்கான திறமையை வளர்த்துக்கொண்டனர். இவர்கள் வாரந்தோறும் கூட்டத்தை நடத்திவருகின்றனர். பல்வேறு பிரச்சினைகளை பேசி தீர்ப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு பிரச்சினையாக அந்தக் கிராமத்திலுள்ள மக்களுக்கு காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு அடிக்கடி வருவதற்கான தீர்வை காண்பதற்காக பாராளுமன்ற கூட்டத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் பேசினர். இந்நோய்கள் கொசுவின் மூலமாகத்தான் உருவாகி, பரவுகிறது என்பதையும், கொசுக்கடியிலிருந்து மக்கள் தங்களை காத்துக் கொள்ளவும், கொசுவினை அழிக்கவும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துவது என முடிவெடுத்தனர். அதன்படி 20 அக்டோபர் 2012 அன்று வீதிநாடக நிகழ்ச்சியை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அந்தக் கிராமத்து மக்களிடம் ஒரு மாற்றம் தெரியவந்திருக்கிறது. இப்போது நோயின் தாக்கம் குறைந்து மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்கின்றனர்.

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்!

❑ இரா.சூர்யா
ஏழாம் வகுப்பு
மாலைநேரப் பள்ளி
வேம்பனி



பூக்கின்ற மலர்களெல்லாம் பூஜைக்கு வைக்கப்படுவது இல்லை. அதுபோல் பிறக்கின்ற மனிதர்களெல்லாம் பெருமைக்கு உரியவர்கள் இல்லை. ஆயிரத்தில், லட்சத்தில் ஒருவர்தான் இறந்தும், இறவாமல் வரலாற்றில் வாழ்கின்றனர். மனிதன் வரலாற்றில் வாழ்கின்றனர். அதுவே பெருமை மிக்க வாழ்வு, போற்றத்தக்க வாழ்வு இதற்கு உதாரணமாய் வீரனுக்கு வீரனாக, தொண்டனுக்குத் தொண்டனாக. துணிச்சல் மிகுந்தவராக வங்கம் தந்த சிங்கமாய் வாழ்ந்து மறைந்த நேதாஜியை கூறலாம்.

## இளமையில் வீரம்

வங்காளத்தில் 1897ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாள் கோலியா என்ற சிற்றூரில் ஜானகிநாத் பிரபாவதி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் சுபாஷ் சந்திர போஸ். அவரது உடன்பிறந்தவர்கள் ஆண்கள் 6 பேரும், பெண்கள் 5 பேரும் ஆவர். சுபாஷ் கதைகள் கேட்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர். குறிப்பதாக தனது தயார் பிரபாவதியிடம் வீரம் நிறைந்த காளிதேவியின் திருவிளையாடல்களை கேட்டு அறிவார். இது அவரிடம் வீரஉணர்வை குழந்தை பருவத்திலேயே ஏற்படுத்தியது. கட்டாக்கில் உள்ள ஐரோப்பியப் பள்ளியில் சேர்ந்து படித்தார். இவர் 4ஆம் வகுப்பு படித்துகொண்டிருக்கும்போது பக்கத்து கிராமத்தில் காலரா நோய் பரவ ஏராளமானோர் மாண்டனர். எஞ்சியவர்கள் தமது உயிரைக் காத்துக் கொள்ள தங்கள் உடைமைகளோடு கிராமத்தை விட்டு வெளியேறினர். அவர்களுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. 'இளங்கன்று பயமறியாது' என்பதற்கேற்ப சுபாஷ் அந்தக் கிராமத்திற்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு உதவினார். பள்ளி சென்ற சுபாஷ் அந்தக் கிராமத்திலேயே தங்கி மக்களுக்கு உதவி செய்தகாரணத்தால் மூன்று நாட்கள் வரை ஊர் திரும்பவில்லை. அதனால் அவரது தாய் பிரபாவதி மகனை காணாமல் தவித்தார். 3 நாட்கள் கழித்து ஊர் திரும்பிய சுபாஷ் தனது தாயிடம் நடந்தவைகளை கூற அவரது தாய் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

## மாணவர் தலைவன்

பள்ளி படிப்பை முடித்த சுபாஷ் 1915ஆம் ஆண்டு எஃப்.ஏ, தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தேர்வில் அவரது ஆங்கில அறிவு ஆங்கிலேயர்களையே வியக்க வைத்தது. படிப்பிலும், செயல்களிலும் முதலாவதாகத் திகழ்ந்த சுபாஷை தலைமைப் பதவி தானாகத் தேடி வந்தது. அந்தப் பள்ளியின் மாணவர் தலைவனாக சுபாஷ் தேர்வு செய்யப்பட்டார். அந்தப் பள்ளியில் ஆங்கிலேயே ஆசிரியர்களால் இந்திய மாணவர்களுக்கு அழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு கொதிப்படைந்தார். குறிப்பாக அந்த பள்ளி ஆசிரியர்

வீடினின் இந்தியருக்கு எதிரான நடவடிக்கைகள் மாணவர்களுக்கு ஆத்திர மூட்டின. அதற்கு எதிராக சுபாஷ் தலைமையில் மாணவர்கள் போராட்டம் வெடிக்க, கல்வி நிர்வாகம் ஸ்தம்பித்தது. இதனால் சுபாஷ் மற்றும் அவரது நண்பர்கள் பள்ளியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இருப்பினும் கொல்கத்தாவில் உள்ள ஸ்காட்டிஷ் கல்லூரியில் சேர்ந்து பிற தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து எம்.ஏ. படிக்க விரும்பினார். அதனால் தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ.சி.எஸ். படிக்க இங்கிலாந்து சென்றார்.

## ஐ.சி.எஸ் பதவியை உதறுதல்

இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்லைகக் கழகத்தில் சேர்ந்து ஐ.சி.எஸ். படிக்கலானான். அப்போது ஆங்கிலேய ஆட்சியை அகற்றுவது ஒன்றே இந்தியாவை மீட்க வழி என்ற எண்ணம் அவரது மனதில் பதிந்தது. இவரது மனமெங்கும் 'விடுதல்... விடுதலை' என கோஷமிட்டது. அதனால் ஐ.சி.எஸ். படிப்பை முடித்துவிட்டு இந்தியா திரும்பினார். ஆங்கிலேயரின் அடக்குமுறையே அகற்ற கொல்கத்தாவில்தான் வகித்து வந்த ஐ.சி.எஸ். பதவியை உதறிவிட்டு காங்கிரஸ் கட்சியில் இணைந்து செயல்பட்டாலும் காந்தியின் அகிம்சைக் கொள்கையை இவர் ஏற்கவில்லை.

## இந்திய தேசிய இராணுவம்

ஐரோப்பாவில் வாழ்ந்த வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் சுபாஷை 'நேதாஜி' என்று அழைத்தனர். அன்று முதல் சுபாஷ் 'நேதாஜி' என்று அழைத்தனர். ஜெர்மன் அதிபர் ஹிட்லரை சந்தித்து இந்தியாவின் விடுதலை உதவக் கேட்டுக் கொண்டார். ஹிட்லரும் உதவி செய்வதாகக் கூறினார். மேலும் நேதாஜியின் வீரத்தை கண்டு வியப்படைந்த ஹிட்லர்தான் கறுப்பர்கள் பற்றி தெரிவித்த கருத்துக்கு நேதாஜிடம் மன்னிப்பு கேட்டார்.

## இறுதியாக...

நேதாஜியால் அமைக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய தமிழக வீரர்கள் இன்னும் தமிழகத்தில் இன்றும் பல இடங்களில் வசிக்கின்றனர். நேதாஜியின் பெயரை கேட்டவுடன் நெஞ்சே நிமிர்த்தி, ஆனந்த கண்ணீருடன் வீரவணக்கம் செலுத்துகின்றனர். சுதந்திர போராட்டத்தில் முக்கிய மைல் கல்லாக விளங்கிய நேதாஜிக்கு நாம்சிரம் தாழ்த்தி நன்றி செலுத்துகிறோம்.

ஜெய்ஹிந்த்.

## என்னைக் கவர்ந்த தலைவர்!



அகிம்சைக்கு
வழிகாட்டிய அண்ணலே
உம் வழி நடப்பேன்.
நாட்டின் வளர்ச்சிக்கு
வழிவகுப்பேன்.

❑ மு.ஞானசேகர்
எட்டாம் வகுப்பு
அம்பேத்கர்நகர்
குழந்தைகள் பாராளுமன்றம்

விடுகதைகள்

1. கனத்த பெட்டி கதவைத் திறந்தால் மூட முடியாது.

அது என்ன?

கடிதம்

2. உதைக்கத் தெரிந்தவனுக்கு உழைக்கவும் தெரியும். அது என்ன?

கழுதை.

3. அடிபட்டவன் அழுதால் அதுவே ஆனந்த ராகம் பலருக்கு. அது என்ன?

மேளம்.

4. போட்டால் ஒரு மடங்கு. போட்டு எடுத்தால் இரு மடங்கு அது என்ன?

அப்பளம்

5. குளிருக்கு அஞ்சாதவன், வெயிலுக்கு பஞ்சானவன். அவன் யார்?

பருத்தி

6. ஒத்தைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை அது என்ன?

மிளகாய்

7. உயரப் பறப்பவனுக்கு வால் உண்டு. கால் அல்ல. அவன் யார்?

பட்டம்

8. சமாதானத் தூதுவன் சிறகடித்து பறக்கிறான். அவன் யார்? புறா.

9. கால்கள் நான்கு நடக்காது. கண் ஆயிரம் இமைக்காது. அது என்ன? - கட்டில்.

10. காதைத் திருகினால் கதை சொல்லுவான். அவன் யார்? வானொலி

11. அனலில் பிறந்தவள், ஆகாயத்தில் பறக்கிறான். அவன் யார்? புகை

12. ஆயிரம் பேர் கூடி வரும் அழகர் மலை. அது என்ன?

தேர்

13. இரண்டு கிணறுக்கு ஒரு பாலம்.

மூக்கு

14. இருட்டு வீட்டில் முரட்டுச் சிப்பாய். பூட்டு

15. உயர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ. அது என்ன?

குடை

16. உரசினால் அழிந்து போகும். அது என்ன? தீக்குச்சி

17. உரிக்க உரிக்க தோல். அது என்ன? வெங்காயம்.

18. ஊருக்கெல்லாம் ஒரே கல். அது என்ன? உப்புக்கல்

19. வானத்துக்கும் பூமிக்கும் ஒரு கம்பி. அது என்ன? மழை

20. இருட்டு அறையில் முரட்டுத் திருடன். அது என்ன? குதிர்



வேலூர் மாவட்டம், வேலூர் குழந்தைகள் பாராளுமன்றம்

விழுப்புரம் மாவட்டம், மைக்கேல்புரம் குழந்தைகள் பாராளுமன்றம்



தனிச்சுற்றுக்கு மட்டும்



Published by ARUWYE. Mazzarello Convent, United India Colony, 1/2, 3rd Main Road,
5th Cross Street, PB530, Kodambakkam, Chennai - 600 024